மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
O.S.NO. 113/2008

13.02.2019

8 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை
வா.சா. 1 – சக்திவேல், த/பெ.நாச்சிமுத்து

1 ம் பிரதிவாதி மாரப்ப கவுண்டர் என்னுடைய தாத்தா என்றால் சரிதான். என்னுடைய தாத்தாவிற்கு நாச்சிமுத்து என்ற ஒரு மகன் மற்றும் லட்சுமி, மயிலாத்தாள் என்ற இரு மகள்களும் இருந்தனர் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது தாத்தாவின் பெயரில்தான் சொத்து இருந்தது என்றாலும், என் அப்பா, தாத்தாவிற்குள் பாகசாசனம் செய்துகொள்ளவில்லை என்றாலும் சரிதான். நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதாரமாக ஏதாவது தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் சுவாதீனத்தில் இருந்ததற்காகவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் மயிலாத்தாள் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஏற்கனவே என்னுடைய அத்தை லட்சுமி முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து அது தீர்ப்பான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அதுபற்றி நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாணபத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் வழக்கு பற்றி தெரியும். அவர்களுக்கு தீர்ப்பான விவரம் எனக்கு தெரியாது. வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு இறுதி நிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா சொத்தில் பாதியை மயிலாத்தாளின் மகன் அருண்குமாருக்கு எழுதி வைத்திருக்கிறார் என்றால் எழுதி வைத்ததாக சொன்னார்கள். என் அப்பா வழக்கு போட்டு அந்த உயிலை உடைத்துவிட்டார் என்றும் அதனால் அது செல்லாது என்றும் சொன்னார்கள். நான் சொல்வது பொய் என்றாலும் என் தகப்பனார் வழக்கு போட்டு உயிலை உடைத்துவிட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அருண்குமார் என் அத்தை மயிலாத்தாளின் மகன். அருண்குமார், விஸ்வநாதன் என்பவருக்கு 2009 ல் கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2011 ம் வருடம் விஸ்வநாதனிடமிருந்து அருண்குமாரின் தகப்பனார் இராமசாமி மீண்டும் விலைக்கு வாங்கிவிட்டார் என்றால் சரிதான். ஷை சங்கதிகளை என்னுடைய வழக்கிலும், சாட்சி வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தில் பங்கு கேட்பதென்றால் என் தகப்பனாரின் சொத்தில்தான் பங்கு

Sd/-சக்திவேல்

கேட்க வேண்டும் என்றாலும் தாத்தாவின் சொத்தில் பங்கு கேட்க முடியாது என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் அவருடைய ¼ பங்கு சொத்தை 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை மட்டுமே கோரியுள்ளேன் என்றாலும் 5,6 பிரதிவாதிகளுக்கு விற்ற கிரைய ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தில் 1/8 பாகம் எனக்குரியது என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மயிலாத்தாளின் பங்கில் நான் பங்கு கேட்கவில்லை. நாச்சிமுத்து மற்றும் மாரப்ப கவுண்டரின் பங்கில் நான் பங்கு கேட்கிறேன். மாரப்ப கவுண்டர் உயிருடன் இருக்கும்போதே கிரையம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் என்பதால் நான் பாகம் ஏதும் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் ஒரு பங்குதாரர் இருக்கும்போது பூர்வீக சொத்தில் எவ்வாறு கிரையம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். மாரப்ப கவுண்டர் அவருடைய பங்கு சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்றாலும் நான் எந்த கேள்வியும் எழுப்ப முடியாது என்றாலும் சரியல்ல. ஏற்கனவே தாவா சொத்து திருப்பூர் முதலாம் கூடுதல் நீதிமன்றத்தில் தீர்ப்பான நிலையில் நான் பாகம் கோர முடியாது என்றாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் நான் அந்த வழக்கில்தான் என் அப்பாவின் பங்கு குறித்து பாகம் கோர முடியும் என்றாலும் சரியல்ல. என்னை ஷை வழக்கில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் மதிப்பை குறைவாகக் காட்டியிருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு அதிகமாக இருந்ததால்தான் என்னுடைய அத்தை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

(மற்ற பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

Sd/-சக்திவேல்

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-S.Indulatha,13.2.2019
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்